NSW GOVERNMENT Education Public Schools

Drive and park safely near schools

சாலைப் பாதுகாப்புத் தகவல்கள்

உங்கள் குழந்தைகள் பள்ளியிலிருந்து போக, வரப் பயணிக்கும்போது அவர்களின் பாதுகாப்புக்கு நீங்கள்தான் பொறுப்பாவீர்கள்.

பள்ளிகளுக்கு அருகே வாகனத்தைப் பாதுகாப்பாக ஓட்டவும் மற்றும் நிறுத்தவும்

பள்ளியின் தொடக்க நாளும், கடைசி நாளும் பாதசாரிகளுக்கும், ஓட்டுநர்களுக்கும் பள்ளிகளுக்கு வெளியே நெரிசலான நேரங்களாகும்.

பின்வருவனவற்றை நினைவில் வைத்துக் கொண்டு நீங்கள் குழந்தைகளை பாதுகாப்பாக வைத்திருக்க உதவிட முடியும்:

- குழந்தைகளை பள்ளி அமைந்திருக்கும் சாலைப் பக்கத்தில் இறக்கிவிடவும் மற்றும் ஏற்றிச் செல்லவும்
- குழந்தைகளைச் சாலையின் மறு பக்கத்திலிருந்து வருமாறு அழைக்கவே கூடாது – அது மிகவும் ஆபத்தானது
- 40 கி.மீ. வேக பள்ளிப் பகுதிகளில் வாகனம் ஓட்டும்போது எப்போதும் கூடுதல் கவனமாக இருக்க வேண்டும்
- நிறுத்த அடையாளங்கள் எல்லாவற்றையும் தவறாது பின்பற்றவும் – இவை கூடுமானவரை குழந்தைகள் பாதுகாப்பாக இருப்பதற்கு உதவிபுரியும்
- பள்ளிக்கூட வாயிலுக்குக் அதிக தூரம் நடந்து செல்ல வேண்டிய சூழ்நிலையாக இருந்தாலும் பொறுப்பான வகையில் வாகனத்தை நிறுத்தவும்
- ஒருபோதும் ஒரு வாகனத்தின் பக்கவாட்டில் இன்னொன்றை நிறுத்த வேண்டாம் – அது சட்ட விரோதமானது, மேலும் அது குழந்தைகளை அபாயத்துக்குள்ளாக்குகிறது
- பள்ளிக்கு வெளியே U வடிவில் திரும்புவதோ அல்லது மூன்று நிலை திருப்பத்தை (three-point turn) செய்வதோ கூடவே கூடாது. ஏனென்றால் அது குழந்தைகளுக்குக் காயம் ஏற்படும் அபாயம் உண்டாகும்
- பாதுகாப்பான மற்றும் பரிவான குணங்களைக் கொண்ட பாதசாரியாகவும், ஓட்டுநராகவும் இருக்க, உங்கள் குழந்தைகளுக்கு முன்மாதிரியாக இருக்கவும்.

மேலதிக உதவிக்கு

பின்வரும் இணையத்திலுள்ள திணைக்களத்தின் சாலைப் பாதுகாப்புக் கல்வித்திட்டத்துக்குச் செல்லவும்: https://education.nsw.gov.au/road-safety-education அல்லது பின்வரும் இணையதளத்துக்குச் செல்லவும்

https://education.nsw.gov.au அதன்பின் சாலைப் பாதுகாப்புக் கல்வியைத் தேடவும்.

நீங்கள் மோட்டார் வாகனத்தில் பயணிக்கும்போது பின்வருவனவற்றை உறுதி செய்துகொள்ளவும் உங்கள் குழந்தைகள்:

- 4 வயதிலிருந்து 7வயதுக்கு இடைப்பட்டவராக அவர்கள் இருந்தால் உயர்ந்த இருக்கையை (booster seat) பயன்படுத்துகிறார்களா – அதுதான் சட்டம்
- தங்களது இருக்கைப் பட்டைகளைச் சரியாக பொருத்தியிருக்கிறார்களா
- மோட்டார் வாகனத்தின் நடைபாதை பக்கமுள்ள பின்புறக் கதவு – 'பாதுகாப்பான கதவு' – வழியாக எப்போதும் ஏறி, இறங்குகிறார்களா
- ஒருபோதும் மோட்டார் வாகனத்துக்குள் தனித்து விடப்படாமல் உள்ளார்களா.

6 மாதங்கள் வரை
அங்கீகரிக்கப்பட்ட பின்புறம் நோக்கியுள்ள குழந்தைகளுக்கான வாகன இருக்கை

6 மாதங்கள் முதல் 4 ஆண்டுகள் வரை
அங்கீகரிக்கப்பட்ட பின்புறம் – அல்லது முன்புறம் – நோக்கியுள்ள குழந்தைகளுக்கான வாகன இருக்கை

4+ ஆண்டுகள்
அங்கீகரிக்கப்பட்ட முன்புறம் நோக்கியுள்ள குழந்தைகளுக்கான வாகன இருக்கை அல்லது உயர்ந்த இருக்கை

145 செ.மீ. அல்லது அதற்கு மேல் உயரம்
வயதுவந்தோர்க்கான மடிமேல் குறுக்காகச் செல்லும் இருக்கைப் பட்டை பயன்படுத்துவதற்குப் பரிந்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச உயரம்